# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1881/6 - 2014 සැප්තැම්බර් මස 22 වැනි සඳුදා - 2014.09.22

*1881/6 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) (அ) பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2010, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1681/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2014, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2014, செத்தெம்பர் 20.*

**அட்டவணை**

*(1) இவ்வறிவித்தலிலுள்ள நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சர் (இல. 19) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-*

*(அ) அதன் நிரல் I இலுள்ள 8 ஆம் , 9 ஆம் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலமும்:-*

*"8. நிரல் II இல் காண்பிக்கப்பட்டுள்ள நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்கள் ;*

*9. நிரல் II இல் காண்பிக்கப்பட்டுள்ள நிறுவனங்களை மேற்பார்வை செய்தல் " ;*

*(ஆ) அதன் நிரல் II இலிலுள்ள 1 ஆவது விடயத்தை அடுத்து பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-*
*"2. தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்" ;*

*10- 339*




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*